
# சித்த மருத்துவ வாகடம் - 2



Dr. சே. சிவசண்முகராஜா M.D.(S)

538
ச

உ

# சித்த மருத்துவ வாகடம் - 2

(இருபாலை த. பொன்னையா வைத்திய முறைகள்)


சித்தமருத்துவ கலாநிதி சே. சிவசண்முகராஜா

*B.S.M.S - 1st Class (Hons) (S.L), M.D (Siddha Pediatrics) (India)*

சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



வெளியீடு:

சித்த மருத்துவ வளர்ச்சிக் கழகம்

199 /1, கில்னர் லேன், யாழ்ப்பாணம்.

| | | |
|---|---|---|
| ***Tittle of the book*** | - | Siddha Maruthuva Vaakadam - 2 |
| ***Author*** | - | Dr. S. Sivashanmugarajah M.D.(S) |
| ***Publisher*** | - | Siddha Medical Development Society. 199/1, Kilner Lane, Jaffna. T.P: 021 222 8320 |
| ***Copy Right*** | - | Publishers |
| ***Printers*** | - | Bharathi Pathippakam. 430, K.K.S Road, Jaffna. |
| ***Edition*** | - | First March 2008 |
| ***Pages*** | - | v + 22 |
| ***Price*** | - | Rs.40.00 |


# பதிப்புரை

என்னால் பதிப்பிக்கப்படும் மூன்றாவது ஏட்டுப் பிரதி இதுவாகும். கட்டு வைத்தியம், சித்தமருத்துவ வாகடம் ஆகிய இரண்டு நூல்களும் என்னால் ஏற்கெனவே பதிப்பிக்கப்பட்டுள்ளன.

இருபாலையில் பிரசித்திபெற்ற வைத்தியராக இருந்த த. பொன்னையா அவர்களின் 10 ஆம் நம்பர் ஏட்டுக் கட்டில் உள்ள விடயங்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. அவ்வேடுகளை எனக்குச் சில வருடங்களுக்கு முன்னர் வழங்கி உதவியவர் அவரின் மகனான பொ. அரியநாயகம் ஆவார். அவருக்கு எனது நன்றிகள்.

ஏட்டுப் பிரதிகளைப் பரிசோதித்து, ஆராய்ந்து, பதிப்பிப்பது என்பது இலகுவான காரியமல்ல. சித்த மருத்துவத்தின் மீது நான் கொண்டுள்ள பக்தியும் சித்தர்களின் அருளாசியுமே எனக்குத் துணையாக உள்ளன என்ற நம்பிக்கையுடன் இந்நூலை உங்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்.

***யாழ்ப்பாணம்*** — ***சே. சிவசண்முகராஜா***
***13. 03. 2008***

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | கோளைக்குக் கைகண்ட நெய் | 01 |
| 02. | கிரந்தியிருமல் தொய்வுக்குநெய் | 01 |
| 03. | கோளைக்கு நெய் | 02 |
| 04. | நடுக்கல் வாற சுரத்துக்குக் குடிநீர் | 02 |
| 05. | காந்த பற்பம் | 02 |
| 06. | இருமலுக்கு நெய் | 03 |
| 07. | இருமலுக்குக் குடிநீர் | 03 |
| 08. | சன்னிக்குக் கொதியெண்ணெய் | 03 |
| 09. | சீரக நெய் | 04 |
| 10. | சன்னிக்கு | 04 |
| 11. | மிளகு களி | 05 |
| 12. | முசலகண்டன...வலிக்கு நெய்யம் | 05 |
| 13. | தீராத புண்ணுக்குக் குளம்பு | 05 |
| 14. | தீராத புண்ணுக்கு எண்ணெய் | 06 |
| 15. | முயல் நெய் | 06 |
| 16. | மூலத்துக்கு | 07 |
| 17. | வெப்புப் பாவைக்கு | 07 |
| 18. | நீர்ச் சோத்துத் தண்ணீர் | 07 |
| 19. | வயிற்றுக்கழிச்சலுக்கு | 08 |
| 20. | வயிற்றுப் புண்ணுக்கு | 08 |
| 21. | விடமுட்டித் தைலம் | 08 |
| 22. | முலை குடியாப் பிள்ளைக்கு | 09 |
| 23. | தீராத புண்ணுக்கு | 09 |
| 24. | கெற்பவாயுவுக்கு | 09 |
| 25. | முகவாதத்திலெண்ணெய் | 10 |





| | | |
|---|---|---|
| 26. | உச்சந்தலைக்குத்துக்கு | 10 |
| 27. | திருநீலகண்டன்... | 10 |
| 28. | புளியெண்ணெய் | 11 |
| 29. | காதுக்கட்டுக்கு | 11 |
| 30. | காதுக்குத்துக்கு | 11 |
| 31. | கெற்பவாயுக்கு | 12 |
| 32. | கண்ணுக்கு மருந்து | 12 |
| 33. | சுவாதக்குளிகை | 13 |
| 34. | பித்த காயத்துக்கு | 15 |
| 35. | பெரும்பாட்டுக்கு | 15 |
| 36. | கெற்பவாயுவுக்குக் காயம் | 16 |
| 37. | கெற்பவாயுவுக்கு எண்ணெய் | 16 |
| 38. | நஞ்சுக்கு | 16 |
| 39. | இதர கொதியெண்ணெய் | 16 |
| 40. | சிலேட்டும வாய்வுக்கு | 17 |
| 41. | சிறுபிள்ளை கழிச்சலுக்கு | 17 |
| 42. | கண்டமாலைக்கு | 17 |
| 43. | வில்வபத்திரித் தைலம் | 18 |
| 44. | வாதப்பிடிப்புக்கு | 18 |
| 45. | இதர கொதியெண்ணெய் | 19 |
| 46. | கறுத்தத்தூள் | 19 |
| 47. | அட்டசூறணம் | 20 |
| 48. | முறிகிரந்தி எண்ணெய் | 20 |
| 49. | வாய்வு குத்துக்கு | 21 |
| 50. | கண்ணுக்கு | 21 |
| 51. | வலஞ்சலமடைத்தால் | 21 |
| 52. | நீரடைப்புக்கு | 21 |
| 53. | சலமறிப்புக்கு | 22 |
| 54. | அக்கரத்தில் கொதியெண்ணெய் | 22 |

## ஆசிரியரின் நூல்கள்

1. ஈழத்துச் சித்தமருத்துவ நூல்கள் ஓர் அறிமுகம்
   *(அரச சாகித்திய மண்டலப்பரிசு, கொழும்பு தமிழ்ச் சங்கப் பரிசு பெற்ற நூல்)*
2. சுதேச மருத்துவ மூலிகைக் கையகராதி
   *(அரச கரும மொழித்திணைக்களப் பரிசு பெற்ற நூல்)*
3. உள நெருக்கீடுகளும் மனநலனும்
4. கட்டு வைத்தியம்
5. இருபதாம் நூற்றாண்டில் ஈழத்துச் சித்தமருத்துவம்
6. பிள்ளைப் பிணிமருத்துவம் - கைநூல்
7. சித்த மருந்தியலும் மருந்தாக்கவியலும்
8. சித்த மருத்துவ மூலதத்துவம்
   *(வட கிழக்கு மாகாணசபையின் உயர்கல்விக்கான விருது பெற்ற நூல்)*
9. யாழ்ப்பாண மக்களின் சைவ உணவுப்பழக்கவழக்கங்கள்
10. மூலிகைகள் ஓர் அறிமுகம்
11. மூலிகை உணவு மருத்துவம்
12. யோகாசனமும் உடல் நலமும்
13. Common Drugs in Siddha Pediatrics
14. இந்து ஆலயங்களில் மருத்துவ சுகாதாரம்
15. மருத்துவமும் சோதிடமும்
16. இந்து விரதங்களும் உடல் நலமும்
17. சித்த மருத்துவ வாகடம்
18. சித்தமருத்துவ மகப்பேற்றியலும் மகளிர் மருத்துவமும்
19. சித்த மருத்துவ வாகடம் - 2



**பிள்ளையார் துதி**

'நல்ல கணபதியை நான்காலமே தொழுதால்
அல்லவினை யெல்லாமகலுமே - சொல்லரிய
தும்பிக்கையானைத் தொழுதால் வினைதீர்க்கு
நம்பிக்கையுண்டே நமக்கு'

## 1. கோளைக்குக் கைகண்ட நெய்

*நற்சீரகம், கருஞ்சீரகம், திற்பலி, வெளுத்தற் பிசின், கொத்தமல்லி, உலுவா, வெட்பாலையரிசி, விழாலரிசி வாலுளுவை, ஏலம், இலவங்கம், நாகம்பூ, செண்பகப்பூ, செவ்வள்ளிக்கொடி, சாதிக்காய்,கராம்பு, வசுவாசி, சிற்றரத்தை, கைப்பு, களிப்பாக்கு, கடுக் காய், மிளகு, ஜடாமாஞ்சில் வேர் - 5 பிடி*
*மஞ்சள் - உள்ளி - 1 பிடி*

*இடித்துத் தூள் பண்ணி நெய்யில் மெழுகு பதம் காய்ச்சிக் கொள்ளவும்.*

## 2. கிரந்தியிருமல், தொய்வுக்கு நெய்

*கடுக்காய் , தூதுவளை, ஆவரை, குருவிச்சை, செப்பு நெருஞ்சி, நீர்ப்புல்லாந்தி, நிலக்குமிழ், இரு மட்டி, குறிஞ்சி, வட்டு, சீதேவியார் செங்கழுநீர், சிறு பூளை இவையெல்லாம் வேர், நறுநெய், மெழுகு பதம் இறக்கி ஒரு காசளவு கொள்ளவும். குணங்கண்டு கூட்டிக் கொடுக்கலாம்.*

### 3. கோளையெல்லாத்துக்கும் பொதுநெய்

கருஞ்சீரகம், திற்பலி, அதிமதுரம், வேற்கொம்பு, பெருங்காயம், மஞ்சள், அக்கரா, சீனக்காரம், துரிசு, காந்தம், கோட்டம், சாதிக்காய், மாயாக்காய், மொசுமொசுக்கைச்சாறு - உழக்கு.
வெண்காயம், பசுவினெய்யுஞ் சரக்கும் போட்டு ஏனாதியாகக் காய்ச்சி, சீனி கூட்டித்தின்னவும்.

### 4. நடுக்கல் வாற சுரத்துக்குக் குடிநீர்

விட்டுணுகிராந்திவேர், பேரமட்டி வேர், சீந்தில் தண்டு, பேய்ப்புடோல்வேர், நாரத்தம்வேர், சுக்கு, கொத்தமல்லி, ஓமம், திற்பலி, மிளகு சமன் கூட்டி நாலொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கவும்.

### 5. காந்த பற்பம்

காந்தம், வெண்காரம், துத்தம், துரிசு, மனோ சிலை, அப்புருவம் (அப்பிரகம்?), அரத்தை, மிளகு, திற்பலி, அரைப்பொடி, இரும்புக்கிட்டம் இவை பொடி செய்து

தூதுவளமிலை, வெற்றிலை, கையாந்தகரை யிலை, இயங்கிலை, நொச்சியிலை, கோமூத்திரம் இவற்றை அரைத்துக் கரைத்து மேற்படி கடைச் சரக்குகளையும் சேர்த்துக் அரைத்து கரைத்து வெயி லிலே சுவறவைத்து எடுத்தெடுத்து வடித்து, பொடி செய்து, இப்படி நாலுசாமமும் பொடி செய்து, வெரு கடிப் பிரமாணம் சாப்பிடவும்.



வயிற்றில் வீக்கமாற்றமை, சூலை, கிராணி,ஈளை, இருமல், சோகை, பாண்டு, பித்தம், நீராமை, பேராமை இவை தீரும்.

### 6. இருமலுக்கு நெய்

கடுக்காய், இந்துப்பு, பொன்னரிதாரம், திற்பலி, வலம்புரிக்காய், நெல்லிக்காய்ச்சாறு, பசுநெய் கூட்டி பதத்தில் வடிக்கவும். இருமல் மாறும்.

### 7. இருமலுக்குக் குடிநீர்

நெருஞ்சி, பெருஞ்சேவகன்பூடு, சிறுவளுதலை, சேவகன்பூடு, சுழலாவரை, வேற்கொம்பு, கோட்டம், அத்திதிற்பலி, தேவதாரம் இவை அரைக்களஞ்சு. இரு நாழி நீர் வார்த்து உழக்காய்க் காய்ச்சி தேன் மேற் பொடியிட்டு கொடுக்கவும்.

குரலெரிவு, கொடிய வெதுப்பிய இருமல், வாத வாதை, பாண்டுரோகம் மாறும். இரண்டு நேரமும் குடிக்கவும்.

### 8. சன்னிக்குக் கொதியெண்ணெய்

நலஞ்சேர் நொச்சி பெருமருந்து நல்ல காண்டை நன்னாரி
தலஞ்சேர் கோரை காற்றோட்டிதானே வேலிப்பருத்தியுட
னிலஞ்சேரவுரி திரிகடுகு நேரே இரு சீரகமதுவு
மூலஞ்சேர் கற்க கேளின்னங் கூறுமப் படியே கொடியிடையே
கூறிய நெல்லிதான்றி கெற் குலவிய கோட்டமேல
மீறிய சாதிக்காயுமென மலற்றோ சிறந்திடு வசம்பு தானும்
சீறிய கடுக்காய் வள்ளி நாரிகோள் ஏலம் பிசினுடனயந்து
கொள்ளே

கொண்டு நீ தூளதாக்கிக் குலவு நல்லெண் ணெய்
வேம்பினியொன்றிய எண்ணெய் தானு மொக் சுவே சரியாக்
கொண்டு
வண்டணி குழலாய் காயவைத்ததின் தூளைப் போட்டு
சென்று நீ தலையில் வைக்கத் தீர்ந்திடுஞ் சன்னிதானே.

## 9. சீரக நெய்

*கருஞ்சீரகம் - 8 பலம், நற்சீரகம் - 1 பலம், கோட்டம் - 7 பலம் கடுக்காய் - 6 பலம், அசமதாகம் - 5 பலம், சுக்கு - 4 பலம் திற்பலி - 3பலம், வசம்பு - 2பலம், பெருங்காயம் - 1 பலம் இது எல்லாம் வறுத்துப் பொடிபண்ணி நெய்யில் தூவிக் காய்ச்சிப் பதத்தில் இறக்கவும். தீரும் நோய்கள் - வரட்சியிருமல், இளைப்பு, வயிற்றுக் கடுப்பு, மேல்மூச்சு.*

## 10. சன்னிக்குக் கைகண்ட எண்ணெய்

*அணிஞ்சில், மூக்கிறைச்சி, எருக்கலை, குதிரைவாலி, தும்பை, நத்தைச்சூரி, கருஞ்சூரை, கறுக்காய், இயங்கு, தூதுவளை, நாயுருவி, வட்டு, எழுமுள்ளு, அவுரி இவை - வேர்.*

*கோழிக்காரம், சுக்கு, வெண்காரம், வெளுத்தற்பிசின், வசம்பு, கொத்தமல்லி, கருஞ்சீரகம், மிளகு, மஞ்சள், அரத்தை, இலுப்பெண்ணெய், ஆமணக்கெண்ணெய் சரி கூட்டிக் கொள்ளவும்.*

*பதத்தில் வடித்து தலைக்கும் வைத்து உள்ளுக்கும் கொடுத்து மேலுக்கும் பூசி நையமிட எந்தச் சன்னியும் தீரும்.*



## 11. மிளகுகளி

*சிறுகீரைவேர், சாத்தாவாரிவேர், சிற்றாமட்டிவேர், இருவேலி, இலாமிச்சுவேர், கரும்பு, சிறு குறிஞ்சாவேர், தூதுவளைவேர், தேனிரண்டு களஞ்சு, திற்பலி, அதிமதுரம், வெண்காயம், சாம்பிராணி, மிளகு மாவும், பசுநெய்விட்டு களி கிண்டித் தின்ன இருமல், நெஞ்சுப் புண்மாறும்.*

## 12. முசலகண்டனுக்கும் உட்குத்து பிறவீச்சு குதிரை வலிக்கு நைய்யம்

*அரப்பு, மிளகு, இந்துப்பு, பாக்குத் தோல் தண்ணீரில் இம்மருந்தை அரைத்து முலைப்பாலிலே நையம் இடவும்.*

## 13. தீராத புண்ணுக்குக் குளம்பு

*துவாலை பெரும் பால்மிடாங்கிக் கிழங்கு, தும்பைக் கிழங்கும் துவைத்துப் பொட்டணிகட்டி வெதுப்பவும். இதற்கு எண்ணெய் -*

*இதரம் - 1 களஞ்சு, அபின் - 1 களஞ்சு, திற்பலி, பொரிகாரம், நெல்லிக்காய், உள்ளி ஒவ்வொன்றும் ¼ களஞ்சு.*

*வெற்றிலைச்சாறு - ¼ படி கூட்டி வேப்பெண்ணெயிற் கொதிப்பித்துக் கொள்ளவும்.*
*குளம்பு - இரதம், ஈயம், நிறுவிஷம், வெள்ளைப் பாஷாணம், துரிசு, சாதிலிங்கம், சமன் எடுத்து பொடி செய்து இரும்புக்கிண்ணியிலே போட்டு சிற்றாமணக்*

கெண்ணெய் விட்டு நெருப்பிலே காயவைக்கவும். தினமேல் பற்றும் அப்படி மூன்றுதரமும் வைத்து இறக்கி ஆற்றி அம்மியிலே அரைத்துக் குளம்பானால் புண்ணிலேபோட மாறும்.

## 14. தீராத புண்ணுக்கு எண்ணெய்

வேலிப்பருத்தி, கோழியவரைப்பிஞ்சுச் சாறு - உழக்கு. தூதுவளைவேர், உத்தமாகாணி, வேப்பங் கொழுந்து எள்ளெண்ணெய், கொவ்வைக் கிழங்கு, சிறுகீரைவேர்- மரமஞ்சள், செஞ்சந்தனம், இந்துப்பு, பொன்மெழுகு, மிளகு, திற்பலி, வேம்பாடல், வகை - 1 களஞ்சு. அரைத்துக் கரைத்து எண்ணெய் நாழி விட்டு பதத்தில் வடித்து, சீலையில் தோய்த்து புண்ணிலிட தீராதபுண்ணும் தீரும்.

## 15. கயரோகத்துக்கு முயல்நெய்

முயலெலும்பு தோல், தலை தள்ளி நாழி நீர்வார்த்துக் காய்ச்சி நாழியாயெடுத்துக் கொள்க. கற்கம் - கொடுமுருங்கை, கணக்காலி, சுழலாவரை, கையாந்தகரை, ஆடாதோடை, கொடிவேலி இவை வேர் வகைக்கு 4 களஞ்சு
நெய் - நாழி
பெருங்காயம், அசமதாகம், இருசீரகம், செவ்வியம், சுக்கு, மிளகு, திப்பலி, இந்துப்பு, சவர்க்காரம், சிறு மூலகம், வாலுளுவை, வகைக்கு - 2 களஞ்சு



இவை கியாளம் போட்டு, பசுப்பால் நாழி, பசு நெய் நாழி விட்டு பதத்தில் காய்ச்சி வடித்து, காலை யில் தின்ன காயரோகவிருமலிளைப்பு, மேல்முச்சு, பிலிகை, குன்மம் குலைப்பு இரத்த குன்மம் தீரும்.

## 16. பிறப்பிட்ட மூலத்துக்கு

ஏய்ப் பன்றிமலமும், வெந்தோன்றிக் கிழங்கும் பொடித்து மூன்று பொட்டளி கட்டி, நெருப்பிலிட்டு புகைக்க உள்ளே வாங்கும்.

## 17. வெப்புப் பாவைக்குக் குடிமருந்து

பிரண்டை வடக்கேபோன வேரைப் பிடுங்கி அரிசி யுடன் சேர்த்திடித்து நெய்யிற் பணியாரஞ்சுட்டுத் தின்ன மாறும்.

## 18. நீர்ச்சோத்துத் தண்ணீர்

எலுமிச்சம்புளி - நாழி, எருமைத்தயிரின் நீர்த் தெளிவு - நாழி, காடி - நாழி, வேர்க் கொம்பு - 1 பலம் இரும்புக் கிட்டம் - 10 பலம், அரைபொடி - 10 களஞ்சு இந்துப்பு - 3 களஞ்சு, வெங்காயம் - களஞ்சு, நேர்வாளம், கடுக்காய் - 30 (கொட்டை தள்ளி) கருக வறுத்து, முற்கூறிய நீரில் போட்டு, புது இயத்திலே (பானை) வார்த்து, பானை வாய்க்குத் துணிகட்டி ஒன்றுவிட்டொருநாள் வெயிலிலுலர்த்தி எட்டாம் நாள் கைவிட்டுபிசைந்து கலக்கி எடுத்து ஒருசிறங்கை தண்ணீர் குடிக்க இரண்டு தரம் வயிற்றால் போகும். இப்படி 3 நாள் குடிக்கவும். பின் ஒன்று விட்டொரு

நாள் குடிக்கவும் இது வெப்புப்பாவை, வாயு, உதர வாயு, பிரமேகம், சோகை, காமாளை, இளைப்பு, எய்ப்பு, இருமல், உடல் வரட்சி, காய்ச்சல், கிராணி, தானப்புழு, கீரைப்பாம்பு, இவற்றுக்கும் நன்று.

## 19.வயிற்றுக் கழிச்சலுக்கு

ஆவரசம்பட்டை, அவின், மொசுமொசுக்கைச் சாறு விட்டரைத்துக் கொடுக்கவும்.

## 20. வயிற்றுப் புண்ணுக்கு

விடத்தற்காயிலை, தென்னம்பாளை, வேப்பம் பட்டை, வேலம்பட்டை, அவித்துத் தண்ணீரெடுத்து களிகிண்டித் தின்னவும்.

## 21. விடமுட்டித் தைலம்

(குதிரைவலி, சன்னி, பிள்ளைத்தாச்சிக்கு நல்லது) குதிரைவாலி, அவுரி, பெருமருந்து, நொச்சி, ஆடா தோடை, வட்டு, முருங்கை, தூதுவளை, வெள்வேல், சாரணை, கொடிவேலி, இவைவேர்.

உள்ளி, நேர்வாளம், வேர்க்கொம்பு, கடுகு, பெருங்காயம், நற்சீரகம், வெந்தயம், கெந்தகம், வசம்பு, வெளுத்தற்பிசின், சீனக்காரம், வெள்ளுள்ளி, துத்தம், துரிசு, நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், - வெற்றிலை வெடிபதம் இறக்கவும்.

வெடிசன்னிக்கு - நத்தைச்சூரிவேர் நறுக்கி சேர்த்து ஒரு காதுக்குள்ளே விடவும்.



நத்தைச் சூரிமூலம், வேர்க்கொம்பு சேர்த்தரைத்து காதை வளையப் பூசவும்.

## 22. முலைகுடியாப்பிள்ளைக்கு – நாய் வாழைக் குடிநீர்

1. மாயாக்காய், அதிமதுரம் அரைத்து நாக்கிற் றடவவும்
2. **குடிநீர்**
   நாய்வாழை, பேய்ப்புடோல், பேரமட்டி சிறுகாஞ் சோன்றி, சிறு சீந்தில், ஆடாதோடை, வேர்க் கொம்பு, வெள்ளுள்ளி, கொத்தமல்லி குடி நீரிடவும்.

### புண்ணுக்கு

ஈரவுள்ளிச் சாறுவிட்டரைத்து கவளிச்சீலையில் பூசி, நிழலுலர்த்தி புண்ணில் போடமாறும்.

## 23. தீராத புண்ணுக்கு

புங்கம் வேர், துடரிவேர், நாவல்வேர், கறுக்காய் வேர், நீர்புல்லாந்திவேர், துரிசு, வெள்ளைக் குந்திருக் கம், வேம்பாடல், கைப்பு, களிப்பாக்கு நல்லெண் ணெய்கூட்டி பதத்தில் வடித்து சீலையில் தோய்த்துப் போட தீராத புண்ணுந்தீரும்.

## 24. கெற்பவாயுவுக்கு

நற்சீரகம், கருஞ்சீரகம், சாதிக்காய், கராம்பு, வசுவாசி, கோட்டம், அதிமதுரம், திப்பலி, சீனக்காரம், துத்தம், துரிசு, கொத்தமல்லி, மிளகு, வெள்ளுள்ளி,

வேர்க்கொம்பு நெல்லிக்காய், கடுக்காய், தான்றிக் காய், இந்துப்பு, வாய்விளங்கம், பெருங்காயம், பெருங்குரும்பை, அசமதாகம், எருக்கலம்வேர், தகரைக் கொட்டை நொச்சிச் சாற்றிலரைக்கவும்.

## 25. முகவாதத்திலெண்ணெய்

நல்லெண்ணெய், தோடம்புளி, இதரம் பெருங் காயம், வெளுத் நற் பிசின், அவின்(?), உள்ளி, வசம்பு, இலைக்கள்ளிச்சாறு வேப்பெண்ணெய் - மெழுகுபதம் வடிக்கவும்.

## 26. உச்சந்தலைக்குத்துக்கு

ஜடாமாஞ்சில், கோட்டம், சித்தரத்தை, கருஞ் சீரகம், தேங்காய்பால், எலுமிச்சம்புளி மெழுகுபதம் வடிக்கவும்.

## 27. திருநீலகண்டன், புலிமுகச்சிலந்திக்கு

மாங்கொட்டை, கருஞ்சீரகம், திற்பலி, மிளகு, அக்காரா, ஈரவெங்காயம், அசமதாகம், வசம்பு, நேர் வாளம், இயங்கம்வேர் அவித்த தண்ணீர் விட்டரைக் கவும்.

மிளகு பிரமாணம் உண்டை பண்ணி மந்தத்துக்கு முலைப்பாலில் கொடுக்கவும். மாந்தத்திற்கு நெய்யிற் கொடுக்கவும்.



## 28. புளியெண்ணெய் (சோகை காமாளைக்கு)

நன்னாரி, சிற்றமட்டி, பேரமட்டி, வட்டு, தூதுவளை இயங்கு, சீந்தில், முத்தல்காசு, பங்கம்பாளை, சீதேவி யார் செங்கழுநீர், பொன்னாங்காணிச்சாறு, சாத்தா வாரிச்சாறு, கரம்பை, ஓரிதழ்தாமரை, கல்முரிசு, களப் பன்னை, நிலக்குமிழ், இருவேலி, இலாமிச்சு, அமுக் கிராய், ஏலம், இலவங்கம், சாதிக்காய், கடுகுரோகணி, கோட்டம் செவ்வள்ளி, வசுவாசி, மரமஞ்சள், உலுவா, மஞ்சள், கராம்பு, கருஞ்சீரகம், திப்பலி, அதிமதுரம், கொத்தமல்லி, வாலுளுவை, ஓமம், நற்சீரகம், உள்ளி, வேர்க்கொம்பு, பற்படாகம், கடுக்காய், எலுமிச்சம் புளி, நல்லெண்ணெய் - மெழுகு பதம்.

## 29. காதுக்கட்டுக்கு எண்ணெய்

மிளகு, உள்ளி, சுக்கு, வசம்பு, நாய்வாழைச் சமூலம், பெருங்குறிஞ்சாவேர் சாறு. வேப்பெண்ணெ யில் கொதிப்பித்து காய்ச்சி, தூளும்போட்டு அடுப்பில் வைத்துக் கொதிப்பித்து வெற்றிலை வெடிபதத்தில் இறக்கி காதுக்கும் விட்டு, மூக்கிலே நையம் பண்ண வும். கை - கண்டது.

சீலைத்திரியிலே தோய்த்துக் கொழுத்தி குழலிலே வைத்து ஊதவும். மாறும்.

## 30. காதுக்குத்துக்கு மருந்து

பருத்திக் கொட்டைமா, வேட்டைவாளிக்கூடு, மிளகு, வேர்கொம்பு, உள்ளி, முருங்கைப்பட்டை அவித்த தண்ணீரிலரைத்துப் பூசவும்.

## 31. கெற்பவாயு, உட்டண வாயுவுக்குக் காயம்

இருசீரகம், அசமதாகம், பெருங்காயம், கராம்பு, வசுவாசி, சாதிக்காய், சீனாக்காரம், இந்துப்பு, கொத்த மல்லி, உலுவா அரிசி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வேர்க்கொம்பு, வசம்பு, வெள்ளுள்ளி, கடுகு, மிளகு இவை சமன் எடுத்து நொச்சிவேர், வேப்பம் வேர், கொன்றைவேர், கறுத்தப்பூக்கொடி வேர், முருங்கைவேர், சமன் எடுத்து பச்சைத் தண்ணீர் விட்டவித்து சாறெடுத்து, சரக்கெல்லாம் எடுத்தரைத்து அந்தச் சாற்றிலே இளாவி (கலக்கி) குழம்பாய்க் காய்ச்சிப் பதத்தில் இறக்கி இரண்டாகப் பிரித்து ஒருபங்குக்கு நேர்வாளங்கொட்டை 6 புடம்பண்ணிப் போட்டு, கொள்ளவும். காலையில் நேர்வாளம் போட்ட காயம் காசெடை தின்னவும். மாலையில் சமிகாயந் தின்னவும். வெந்நீர் பருகவும். உப்புப்புளி தவிர்க்கவும். கெற்பவாயு, கெற்பசூலை மாறும்.

## 32. கண்ணுக்கு மருந்து

துத்தம், துரிசு, வசம்பு, புளியமிலைச் சாற்றிலே ஒருநாள் அரைத்து, பனைமட்டைச் சாற்றிலே ஒரு நாளரைத்து, இரண்டு நாளரைத்து சதைவளர்ந்த கண்ணுக்குத் தேனிலிடவும். செருமின கண்ணுக்கு புளியமிலைச் சாற்றிலிடவும்.

விளுகிற கண்ணுக்கு முலைப்பாலிலிடவும். பூளைசாறின கண்ணுக்கு சிறுநீரிலிடவும்.



## 33. சுவாதக் குளிகை

இருசீரகம், மாயாக்காய், பெருங்காயம், அதிவிடயம், சீனாக்காரம், துத்தம், துரிசு, சதகுப்பை, பொரிகாரம் கொத்தமல்லி, கோட்டம் இந்துப்பு, வால் மிளகு, சிறுதேக்கு, கற்கடகசிங்கி, கடுகுரோகிணி, வேலிப்பருத்தியிலை, அதிமதுரம், வாய்விடங்கம், சுக்கு, திப்பலி, மனோசிலை, சுக்கு, மிளகு, சன்னியினாயகன்விரை, தூதுவளைவேர், பண்ணைக்காயிவை(பன்னை?) வகை சமன் எடுத்து ஒருபாகத்துக்கு நேர்வாளஞ் சேர்த்தும் மறுபாகத்துக்குச் சேர்க்காமலும் அரைக்கவும்.

தேன் தோடம்புளிவிட்டரைக்கவும். பசுவினெய் விட்டரைக்கவும். முசிற்றுமுட்டை, நாக்கிளிப்பாம்பு அவித்த தண்ணீர்விட்டரைக்கவும்.

பிறகு தேன் விட்டரைக்கவும். மெழுகு பதத்தில் வந்தபின்னர் சரிசமன்பிரித்து ஒரு பங்குக்கு நேர்வாளம் போட்டரைத்து முன்சொன்ன அனுபானங்களில் அரைத்துக் கொள்ளவும்.

பின்னர் சமிகுளிகை (செமிகுளிகை) யென்றும், விரேசனக்குளிகை யென்றும் இலவங்கொட்டைப் பிரமாணம் உருட்டி நிழலுலர்த்திக் கொள்ளவும். வாத, பித்த, சிலேட்டுமம, மந்த சுரங்கள் கண்டு சமிகுளிகையைக் கொடுக்கவும்.

கொடுக்கும் வகை - சிலேட்டும சுரங்கண்டால் ஆடாதோடைவேர், வெள்ளை வட்டு வேர், சிறுகாஞ்

சோன்றிவேர், தூதுவளம் வேர், செவ்வியம், இருவேலி மூலம், கோரைக் கிழங்கு இவை சமன் எடுத்து துவைத்து ஒரு பானையில் போட்டு $\frac{1}{8}$ ஆக காய்ச்சி அதில் கொஞ்சத் தண்ணீரெடுத்து 3 குளிகை போட்டுக் கொடுக்கவும். சிலேட்டும சுரங்கொண்டவாயு வென்றால் கோரைக்கிழங்கு, பொன்னாங்காணி, திப்பலி, கொத்தமல்லி, வேர்க்கொம்பு, இந்துப்பு, இவை சமன் எடுத்துக் காய்ச்சி அந்தத் தண்ணீரில் 3 குளிகை போட்டுக் கொடுக்கவும்.

வாத பித்த சுவாதம் மாறும். மாறாதிருந்தால் பசு நெய், ஆடாதோடைவேர், வேப்பெண்ணெய், தேன் கூட்டி 3 குளிகை பொட்டுக் கொடுக்கவும். சுவாத சன்னிமாறும்.

சுவாதசுளை கண்டால் தோடம்புளியும் நல்லெண்ணெயுங் கூட்டி 3 குளிகை போட்டுக் கொடுக்கவும். சுவாதசுளை, சுவாதஇளைப்புக்கண்டால் - குருந்த மிலையும் பட்டையுந்துவைத்து வண்டுகட்டி அவித்துப் பிழிந்து அந்தத் தண்ணீரும், பசுநெய்யும், முலைப் பாலும் சரி கூட்டி 3 குளிகை சேர்த்துக்கொடுக்க. சுவாத கொளுவல் கண்டால் - வேர்க்கொம்பும், முலைப்பாலும் வேப்பெண்ணெயுங் கூட்டி 3 குளிகை கொடுக்கவும்.

அதற்கும் மாறாதிருந்தால் மாவிலங்கைவேரும், வேர்க்கொம்பும், வேப்பம் பட்டையும், துவைத்துப் பிழிந்து இலுப்பெண்ணெயுங்கூட்டி 3 குளிகை சேர்த்துக் கொடுக்கவும். குத்துக் கொழுவலெல்லாம் மாறும்.



இருமல், வரட்சி சளிவராதிருந்தால் - வேர்க் கொம்பு, தூதுவளைவேர், கண்டங்கத்தரிவேர் வட்டு வேர், சீந்திற்றண்டும் அவித்து தண்ணீரெடுத்து 3 குளிகை போட்டுக் கொடுக்கவும்.

அதற்கும் மாறாதிருந்தால் - ஈரவெண்காயம், தக்கோலம் கொண்டை(கொன்றை), பசுநெய்யுங் கூட்டி 3 குளிகை கொடுக்கவும்.

அதற்கும் மாறாதிருந்தால் - வேப்பம்வேர், கொடுக்குளர்ச்சி வேர் (கொடிக்கழற்சிவேர்) குருந்தம் வேர், நாவித்தண்டைவேர், நொச்சிவேர், வேர்க் கொம்பு, வெள்ளுள்ளி, துவைத்து வேடுகட்டி அவித்துப்பிழிந்து 3 குளிகை சேர்த்துக் கொடுக்கவும். இருமல் சளி இளகும். சுகம் வரும்.

தொய்வு, இளைப்புக்கண்டால் - ஆடாதோடை வேர், துவைத்து $\frac{1}{8}$ ஆகக் காய்ச்சி அத்தண்ணீரில் 4 குளிகை போட்டுக் கொடுக்கவும் மாறும். மாறாதிருந்தால் - கொத்தமல்லி, கோட்டம், வெள்ளி(உள்ளி) சீனக்காரம், செஞ்சந்தனம், சந்தனம் கூட்டி அரைத்து, முலைப்பாலும் கூட்டி 2 குளிகை சேர்த்துக் கொடுக்கவும். தொய்வு, இருமல் மாறும்.

### 34. பித்த காயத்துக்கு

முலைப்பால் சந்தனம், அதிமதுரம் - 3 களஞ்சு அரைத்துக் குடிக்கவும்.

### 35. பெரும்பாட்டுக்கு

முலைப்பாலுஞ் சந்தனமும் அரைத்துக் குடிக்கவும்.

### 36. கெற்பவாயுவுக்கு காயம்

உள்ளி, மிளகு, வேர்க்கொம்பு, கடுக்காய், உலுவா, இருசீரகம், திப்பலி, வசம்பு, வெளுத்தற் பிசின், கோட்டம், கொத்தமல்லி, சாரணைக் கிழங்கு தேங்காய்ப்பாலிற் காய்ச்சி நேர்வாளம் மேற்பொடி போடவும்.

### 37. கெற்பவாயுவுக்கு எண்ணெய்

இருசீரகம், ஏலம், இலவங்கம், உலுவா, அதிமதுரம், கராம்பு, திப்பலி, தக்கோலம், கொத்தமல்லி, செஞ்சந்தனம், வேம்பாடல், கைப்பு, களிப்பாக்கு, முட்பூலா, நீர்ப்பூலா தம்பலக்குருவிச்சை, துடரி, கறுக்காய் இவைவேர் ஒதியம்பட்டை, தென்னம்வேர் காயவைத்து இடித்துத் தூளாக்கி நல்லெண்ணெயிற் கொதிப்பித்து தின்னவும்.

### 38. நஞ்சுக்கு

கொத்தமல்லி, சுக்கு, பருத்திவேர், நன்னாரிவேர், அரைத்து சீனி அல்லது பனங்கட்டி கூட்டிக் கொடுக்கவும்.

### 39. இதர கொதியெண்ணெய்

உள்ளி, வசம்பு, திப்பலி, இதரம், கருஞ்சீரகம், கொத்தமல்லி, வேர்க்கொம்பு, சதகுப்பை, வெளுத் தற்பிசின், பெருங்காயம், மரமஞ்சல், வேப்பெண் ணெய், மாவிலங்கை, தூதுவளை, தயிர் வாளை



(தயிர்வேளை), உவாய், இயங்கு சாறணை, எருக்கலை, காண்டை, குப்பைமேணி, பெருமருந்து, சன்னிகள நாயகன் இவைவேர். வெற்றிலை வெடிபதம் இறக்கவும்.

### 40. சிலேட்டும வாய்வு நெஞ்சில் மறித்தால் குளிகை.

இரதம் - களஞ்சு1, சாதிலிங்கம், துரிசு, கெந்தகம், வெண்காரம், பொன்னரிதாரம், மனோசிலை, நாவி வகை - 1 களஞ்சு. ஊசிக்காந்தம் - 1 களஞ்சு பசுக் கோமயம் விட்டரைக்கவும்.

எலுமிச்சம்புளி, இஞ்சிச்சாறு, பேய்ப்பீர்க்கஞ்சாறு விட்டரைக்கவும். குன்றிமணிப் பிரமாணம் குளிகை செய்து நிழலுலர்த்தி, இஞ்சிச்சாற்றில் அல்லது எலுமிச்சம் புளியிற் கொடுக்கவும்.

### 41. சிறுபிள்ளை வயிறுகழிந்தால் மருந்து

நற்சீரகம், கராம்பு, அதிமதுரம் ஈரவெங்காயம், மாயாக்காய், ஏலம், மாதாளம்பிஞ்சு, பருத்திப்பிஞ்சு எல்லாம் ஒன்றாய்த் தட்டியரைத்து, புதுச்சட்டியில் தண்ணிர் வார்த்து ஊறவைத்துப் பருக்கவும்.

### 42. கண்டமாலைக்கு

வெல்லங்கிரிவேர், மருக்காரைவேர், மஞ்சள், வேர்க்கொம்பு, வெங்காயம், எலுமிச்சம்புளிவிட்ட ரைத்து கொதிப்பித்து பூசவும்.

## 43. வில்வ பத்திரித் தைலம்

சாந்தமாம் வில்வைவேர்த் தைலங் கேளுந்
தானான வில்வைவேர் பலந்தான் பத்து
பாந்தமாயிடியக் காய்ச்சி பதத்துக்கு நீரில்
பருவமாயெட்டொன்றாய்க் காய்ச்சிப்
போந்த எண்ணெய் நாழிவிட்டுச் சந்தனமொரு
பலந்தான் பொருந்தவே கசாளத்திலரைத்துப் போட்டு
வாந்த மெழுகாக்கால் வடித்துக் கொண்டு
வாகாக முழுகிவரும் வழமைகேளேன்.

வண்மையுடன் முழுகிவரப் பித்தம் போமே
வரிசைபெற மெய்யிலுட்டணங்கள்போகு
மிளமைபெற வாக்கு விக்கு மேகம் போக்கு
மிருகண்ணுந் தெளிவிக்கு மிகுமலம் போக்கு
முளமதனிலிரத்த பித்த மோடிப் போகும்
உள்வரட்சி உரிசுரங்கள் கழிந்து போகுந்
தன்மை பெறச் சூட்சியினால் தைலஞ் சொன்னேன்
சம்பிரதாயம் பாருந் தரணியோரே.

## 44. வாதப்பிடிப்புக்கள் உளைவுகளுக்குப் பூச எண்ணெய்

*சாண் நீளம் - 1, சாண் அகலம் - 1 கொண்ட சீலையில் ஏழுநாள் கள்ளிப்பால், ஏழுநாள் எருக்கலம் பால் ஊட்டிக் காயவைக்கவும்.*

*சரக்கு - கடுகுரோசனை, கெந்தகம், இரதம், சாதிலிங்கம், மனோசிலை, அரிதாரம், காந்தம் இவை*



*களஞ்சு - 1 வேப்பெண்ணெய் விட்டரைத்து மேற்படி சீலையில் பூசி நிழலுலர்த்தி ஒரு நாள் காயவைத்து, திரியாகத்திரித்து ¼ படி வேப்பெண்ணையில் எரிய விடவும்.*

*வாதத்துக்கு உளைவுகள், பிடிப்புகளுக்குப் பூசி வாதமடக்கிக் கஷாயத்தால் கழுவுவது.*

## 45. இதர கொதி எண்ணெய்

*குப்பைமேனி, சன்னிகள நாயகன், இயங்கு, உவாய், கொடிவேலி, நொச்சி, அவுரி, தூதுவளை ஆதண்டை, பெருமருந்து, எருக்கு, கறிமுள்ளி, மாவிலங்கை, நத்தைச்சூரி, திராய், சிற்றாமணக்கு, வாதமடக்கி, சாரணை, சிவனார் வேம்பு, முருங்கை இவை வேர். இருசீரகம், வெளுத்தற்பிசின், வாலுளுவை, கொத்தமல்லி, கராம்பு, விழாலரிசி, வெட்பாலை அரிசிமா, மஞ்சள், சதகுப்பை அக்கரா, சன்னிநாயன் கொட்டை, அரத்தை, இதரம் ஒருவராகனெடை முறித்தெடுத்து (கஜ்ஜலி?) வேருஞ்சரக்கும் பொடி செய்து வேப்பெண்ணெய் காயவைத்து வெற்றிலை வெடி பதத்தில் இறக்கி தூள்போட்டு தலையிலும் வைத்து உள்ளுக்குங் கொடுக்கவும். சன்னி-18, வாதம் - 80 மாறும்.*

## 46. கறுத்தத்தூள்

*இதரம், கெந்தகம், பொரிகாரம், பொன்னரிதாரம், மனோசிலை, ஊசிக்காந்தம், சாதிலிங்கம், மிளகு, வேர்க்கொம்பு, உள்ளி*

மந்தத்துக்கு - உள்ளித் தண்ணீரில் கொடுக்கவும். வாயுவுக்கு- வசம்புத் தண்ணீரில் கொடுக்கவும் துவாலைக்கு- மஞ்சள் மாவிற் கொடுக்கவும்.

### 47. அட்ட சூறணம் (கை-து)

சீரியரிருவருஞ் சிறந்த மூவருமாணியவடகுளத்த
மந்த - மோதருங்

சூரியரொருவருங் கொடிய காயருங் கோவரி
லென்ன வாகேறிடடொக்குமே

இந்தச் சரக்கெல்லாம் எடுத்து வெட்டுமாறன் உண்டாக்குவது போல வறுத்து இடித்து வைத்துக் கொண்டு அந்தி சந்தி இருநேரந்தின்று வென்னீர் குடித்துவர காய்ச்சல், திமிர் வாயு, உளைவு, குன்மம், செரியாமை வாய்வு தீரும்.

### 48. முறிகிரந்தி எண்ணெய்

சாத்தாவாரிச்சாறு - நாழி. பிள்ளைக்கற்றாளைச் சாறு- நாழி. தூதுவளைவேர்- 4பலம். கொடிவேலிவேர் பலம் - 4 பொன்னரிதாரம், சாதிலிங்கம், துத்தம், துரிசு, வெங்காயம், சிவந்தபாஷாணம், கௌரிபாஷாணம், இருவி, பச்சை நாவி,நிறுவிஷம், நெல்லிக் கெந்தகம், இதரம் - களஞ்சு - 1 ஆமணக்கெண்ணெய் கொத்து. பதத்தில் வடித்து தலைக்கும் வைத்து மேலுக்கும் பூசவும். கிரந்தி, பறங்கி வியாதி தீரும்.



### 49. 18 வாய்வு குத்துக்குக் குளிகை

திப்பலி, வேர்க்கொம்பு, கடுகு, கடுக்காய், நெல்லிப்பருப்பு, பொன்னரிதாரம், இதரம், வெங்காயம், கெந்தகம், வற்சநாபி, நேர்வாளம், கையாந்தகரைச சாற்றில் அரைத்து உருட்டவும்.

உட்குத்துக்கு எலுமிச்சம் பழச்சாற்றில் கொடுக்கவும். பிறவீச்சுக்கு - எருக்கலம்பாலில் மத்திக்கவும்.

### 50. கண்ணுக்கு குளிகை

சங்கு, பளிங்கு, திப்பலி, மனோசிலை, அரிதாரம், இந்துப்பு, மஞ்சள், முலைப்பாலில் அரைத்துப் பூசவும். அல்லது தேனிலுரைத்துப் பூசவும்.

### 51. வலஞ்சலமடைத்தால் மருந்து

| | | |
|---|---|---|
| வெங்காயம், உள்ளி | - | 1 |
| நற்சீரகம் | - | எலுமிச்சங்காயளவு |
| திப்பலி | - | ½ சிறங்கை |

தேனில் குழைத்துத் தின்னவும். உடைக்கும்.

II

### 52. நீரடைப்புக்கு மருந்து

1. வெண்காரம், சீனக்காரம், பச்சை மஞ்சள் சாற்றில் கொடுக்கவும்.

2. ஆமணக்கங்கொட்டை தோல்போக்கி - 1 சிறங்கை வெண்காரம், பொரிகாரம், கறுத்த குந்திருக்கம், இளநீரில் அரைத்துக் கரைத்துக் குடிக்க சலமுடைக்கும்.

3. வெண்காரம், மிளகு. திப்பலி, வேர்க்கொம்பு, பொரிகாரம், நற்சீரகம், நறுநெய் கூட்டி வடித்துக் கொடுத்க நீருடைக்கும்.


## 53. சலமறிப்புக்கு

வெந்தோன்றிக் கிழங்கு, வெள்ளரிக் கொட்டையும் வேரும், கிழங்கும், வெளவால் புழுக்கையும், எலிப் புழுக்கையும், திப்பலி, பெருங்காயமெல்லாங் குளம்பாக்கி உள்ளங்காலிலும், வயிற்றிலும் பூசவும்.

நிலவாகையிலை, முடக்கொத்தானிலை, ஈர வெங்காயம், ஆமணக்கெண்ணெயிற் கொடுக்கவும். கொவ்வையிலையுந் தண்டுந்துவைத்துப் பிழிந்து நெய்யுங் கூட்டிக்கொடுக்கவும்.

## 54. அக்கரத்தில் கொதிஎண்ணெய்

இருசீரகம், ஏலம், இலவங்கம், வெங்காயம், பீநாறி, செஞ்சந்தனம், கொத்தமல்லி, உலுவா, அக்கரா, அரத்தை, மரமஞ்சள். அசமதாகம், பிராய் வேர், வெள்ளைக் கிலுகிலுப்பை வேர், முசிற்று முட்டை, இவை பொடியாக்கி நல்லெண்ணெயிற் கொதிப்பிக்கவும்.



பாரதி பதிப்பகம், 430, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்.

61